# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

---

(2004 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2004, பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

## 2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

[2004 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ—ஓ. 2/2004

### 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) ஒவ்வொரு மாகாண சபையும், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டவொரு கட்டளையில் சனாதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்";

(2) 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் உள்ள "கிலோ மீட்டருக்குக் கணிக்கப்படல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுக :—

"கிலோ மீட்டருக்குக் கணிக்கப்படல் வேண்டும் :

ஆயின், இவ்உட்பிரிவின் நியதிகளின்படி ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும் உறுப்பினர்களின்

எண்ணிக்கை, 61அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படும் இரு உறுப்பினர்களைக் குறைத்து, 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டவொரு கட்டளை மூலம் சனாதிபதியினால் குறித்துரைக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு நேரொத்ததாதல் வேண்டும்.";

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அதன் (இ) என்னும் பந்தியில் "பூரண நோன்மதி நாளன்று தவிர்ந்த ஏதேனும் நாளானதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பூரண நோன்மதி நாளன்று தவிர்ந்த ஒரு சனிக்கிழமையாக அல்லது வேறு நாளாக வந்தமைகின்ற ஏதேனும் தேதியானதும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*ஆணையாளரின் தீர்மானத்தை ஒழித்தல்.*

4. மூன்றாம் பிரிவின்கீழ் ஆணையாளரினால் ஆக்கப்பட்டதும், 2003 திசெம்பர் 16 ஆம் தேதிய 1319/4 ஆம் இலக்க, அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதுமான தீர்மானம் இத்தால் ஒழிக்கப்படுகின்றது.

*ஒவ்வாமையின் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387 : (வெளிநாடு) ரூபா 1.849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம். இல. 32. திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம். லோட்டஸ் றோட். கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்